16th February 1959]

இருந்தும், இன்னும் முனிசிபாலிட்டியாக மாற்றவில்லை. ஆனால் தென் காசி, சங்கரன்கோவில், கம்பம் போன்ற பிரதேசங்கள் குறைந்த வருமானம், குறைந்த ஜனத்தொகையுள்ள நகரங்களாக இருந்தும் அங்கே முனிசி பாலிட்டிகளை ஏற்படுத்தி இருப்பதன் காரணம் என்ன என்பதையும் கோவில்பட்டியை முனிசிபாலிட்டியாக மாற்றாமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கோவில்பட்டியைப் பொறுத்த வரையில் இப்பொழுது நான் கொடுத்த பதிலிலிருந்து தெரியும். எப்பொழுது பஞ்சாயத்து ஆக்ட் அமுலுக்கு வருமோ அப்பொழுது அது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னேன்.

Women's Welfare Centres in Tirunelveli district.

* 382 *Q*.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri T. Velucham): கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா —

(அ) நெல்லை ஜில்லாவில் பெண்கள் நல சென்டர்களில் செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்காக ஜில்லா பெண்கள் நல அதிகாரியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு ?

(ஆ) இந்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A sum of Rs. 300 is sanctioned as working capital for the purchase of raw material for the Women's Work Centres. The sale proceeds of the articles produced in the Centres are utilised for further purchase of raw materials.

(*b*) No, Sir.

Anthrax

* 383 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether cases of Anthrax have been reported in the North Arcot district recently ; and

(*b*) if so, the number of cattle and sheep affected ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) 67 Sheep and 3 cattle were affected.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that cattle and sheep affected by anthrax should be burnt to prevent infection of the disease to other burnt animals and if so, were they burnt ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have the information. But preventive measures on a large scale and preventive inoculations were done and the disease was controlled.

Rearing of Fish

* 385 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே மீன் வளர்ப்பு இலாகாவுக்கு 1958–59-ஆம் வருஷத்திலே ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எத்தனை குளங்களிலும், கிணறுகளிலும், ரிசர்வாயர்களிலும் மீன் வளர்ப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன ?

(இ) எத்தனை பவுண்டு (lb.) மீன் எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) During the year 1958–59 a sum of Rs. 9,100 was allotted to Coimbatore district for the development of fisheries.

(*b*) In six demonstration tanks and in one reservoir (Amaravathi Reservoir) fish culture has been undertaken in Coimbatore district. Against a target of stocking the reservoir with 400,000 fingerlings 335,170 quick growing fingerlings have so far been stocked.

(*c*) A quantity of 8,955 lb. of fish was landed from the demonstration tanks and sold for Rs. 1,920·75 nP. up to date. No fishing is done at present in the Amaravathi Reservoir as it has been taken over recently for stocking fingerlings.

SRI P. G. MANICKAM : லோயர் பவானி "டாமிலும்" அதற்குச் சம்பந்தப்பட்ட தண்ணீர் பாயும் இடங்களிலும் இந்த மீன் வளர்ப்பு நடைபெறுகின்றனவா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுது ஓடத்துறை குளம், அனந்தசயனம் குளம், அவனுசி கோயில் குளம், பொள்ளாச்சி முனிசிபல் குளம், அனுமார்குளம், ஆஞ்சநேய குளம் ஆகிய இடங்களில் இப்பொழுது மீன் வளர்ப்பு நடந்து வருகிறது.

SRI A. GOVINDASAMY : அமராவதி ரிசர்வ யரில் மீன்கள் வளர்க்கப்படாத நேரத்தில், அதற்கு இன்ஸ்பெக்டர் போட்டிருப்பதன் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : மீன்கள் வளர்க்காத நேரம் என்று இல்லை. குஞ்சுகள் விட்டால் பாதுகாப்பதற்கு இன்ஸ்பெக்டர் வேண்டி இருக்கிறது.

SRI P. G. MANICKAM : எத்தனை குளங்களிலும், கிணறுகளிலும், ரிசர்வாயர்களிலும் இந்த மீன்கள் வளர்ப்பு வேலை 1957–58-ல் திட்டமிடப்பட்டபடி வளர்க்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தனிக் கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : இந்த நல்ல தண்ணீர் குளங்களில் கடல் மீன்கள் வளர்க்க அரசாங்கம் முயற்சிக்குமா ? முயற்சி வெற்றி பெறுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜோசியம் எனக்கு கூறத் தெரியாது. நல்ல தண்ணீர் உள்ள இடங்களில் வளர்க்கக் கூடிய மீன்கள்தான் அங்கு வளர்க்கப்பட்டு வருகின்றன.

SRI N. MARUDACHALAM : மழை பெய்தால்தான் குளங்களில் தண்ணீர் இருக்கிறது. மழை இல்லாவிட்டால் குளங்களில் தண்ணீர் வற்றி விடுகிறது. ஆகவே இந்த மாதிரிக் குளங்களில் மீன் வளர்ப்பது சாத்திய மாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தண்ணீர் உள்ள குளங்களில் மீன் வளர்ப்பது சாத்தியமாகத்தான் இருக்கிறது.